SPM 2020

# எஸ்.பி.எம் தமிழ்மொழி இலக்கணம்

## பயிற்றி 1

வெ.விஜயன்

பகாங் மாநில இடைநிலைப்பள்ளித் தமிழாசிரியர் கழகம்

| இலக்கணம் | கூறு | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| எழுத்தியல் | உயிர் எழுத்து | | | | | | | | | |
| | மெய் எழுத்து | | | | | | | ✓ | | |
| | உயிர்மெய் எழுத்து | | | | | | | | | |
| | ஆய்த எழுத்து | | | | | | | | | |
| | இன எழுத்து | | | | | ✓ | | | | |
| | **சுட்டெழுத்து** | | | | | | | | | |
| | அகச்சுட்டு | | | | | | | | | |
| | புறச்சுட்டு | | | | | | | | | |
| | **வினா எழுத்து** | | | | | | | | | |
| | அகவினா | | | | | | | | | |
| | புறவினா | | | | | | | | | |
| | எழுத்து வரன்முறை | | | | | | | | | |
| | போலி | | | | | ✓ | | | | |
| | முதற்போலி | | | | | | | | | |
| | இடைப்போலி | | | | | | | | | |
| | கடைப்போலி | | | | | | | | | |
| | **குற்றியலுகரம்** | | | | | | | | | |
| | நெடில்தொடர் | | | | | | | ✓ | | |
| | வன்தொடர் | | | | | | | | | |
| | மென்தொடர் | | | | | | | ✓ | | |
| | இடைத்தொடர் | | | | | | | | | |
| | உயிர்த்தொடர் | | | | | | | | | |
| | ஆய்தத் தொடர் | | | | | | | | | |
| | **முற்றியலுகரம்** | | | | | | | | | |

| இலக்கணம் | கூறு | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| சொல்லியல் | இயற்சொல் | | | | | | | | | |
| | திரிசொல் | | | | | | | | | |
| | திசைச்சொல் | | | | | | | | | |
| | வடசொல் | | | | | | | | | |
| | **பெயர்ச்சொல்** | | ✓ | | | | | | | |
| | பொருட்பெயர் | | | | | | | | | |
| | இடப்பெயர் | | | | | | | | | |
| | காலப்பெயர் | | | | | | | | | |
| | சினைப்பெயர் | | | | | | | | | |
| | பண்புப்பெயர் | | | | | | | | | |
| | தொழிற்பெயர் | | | | | | | | | |
| | இடைச்சொல் | | | | | | | | | |
| | உரிச்சொல் | | | | | | | | | |
| | இடுகுறிப்பெயர் | | | | | | | | | |
| | காரணப்பெயர் | | | | | | | | ✓ | |
| | **ஆகுபெயர்** | | | | | | | | ✓ | |
| | பொருளாகு பெயர் | | | | | | | | | |
| | இடவாகு பெயர் | | | | | | | | | |
| | காலவாகு பெயர் | | | | | | | | | |
| | சினையாகு பெயர் | | | | | | | | | |
| | பண்பாகு பெயர் | | | | | | | | | |
| | தொழிலாகு பெயர் | | | | | | | | | |
| | **பகுப்பு** | | | | | | | | | |
| | இடம் | | | ✓ | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | (காலம், திணை, பால், எண், இடம்) | | ✓ | | ✓ | | | | | |
| | **வேற்றுமை** | | | | | | | | | |
| | முதலாம் வேற்றுமை | | | | | | | | | |
| | 2ஆம் வேற்றுமை | | | | | | | | | |
| | 3ஆம் வேற்றுமை | | | | | | | | | |
| | 4ஆம் வேற்றுமை | | | | | | | ✓ | | |
| | 5ஆம் வேற்றுமை | | | | | | | | | |
| | 6ஆம் வேற்றுமை | | | | | | | | | |
| | 7ஆம் வேற்றுமை | | | | | | | | | |
| | 8ஆம் வேற்றுமை | | | | | | | | | |
| | **வினைச்சொல்** | ✓ | | | | | | | | |
| | காலம் | | | | | | | | | |
| | வினைமுற்று | | | | | | | | | |
| | **எச்சம்** | | | | | | ✓ | | | |
| | வினையெச்சம் | | | | | | | | | |
| | பெயரெச்சம் | | | | | | | | | |
| | தன்வினை | | | | | | | | | |
| | பிறவினை | ✓ | | | | | | | | |
| | செய்வினை | | | ✓ | ✓ | | | | | |
| | செயப்பாட்டுவினை | | | | | | | | | |
| | குன்றியவினை | | | | | ✓ | | | | |
| | குன்றாவினை | | | | | | | | | |
| | உடன்பாட்டுவினை | | ✓ | | | | | | | |
| | எதிர்மறைவினை | | | | | | | | | |
| | வினையடை | | | | | | | | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெயரடை | | | | | | | | | |
| | பகுபதம் | | | | | | | | | |
| | பகாப்பதம் | | | | | | | | | |
| **வாக்கியம்** | எழுவாய் | | | | | | | | | |
| | பயனிலை | | | | | | | | | |
| | செயப்படுபொருள் | | | | | | | | | |
| | செய்தி வாக்கியம் | | | | | | | | | |
| | வினா வாக்கியம் | | | | | | | | | |
| | விழைவு வாக்கியம் | | | | ✓ | | | ✓ | | |
| | உணர்ச்சி வாக்கியம் | | | | | | | | | |
| | தனி வாக்கியம் | | | | | | | | | |
| | தொடர் வாக்கியம் | | | | | | | | | |
| | கலவை வாக்கியம் | | | | | | | | | |
| | நேர்க்கூற்று | | | | | | ✓ | | | |
| | அயற்கூற்று | | | ✓ | | | | | | |
| | தொகாநிலைத் தொடர் | | | | | | | | | |
| | **தொகைநிலைத் தொடர்** | | | | | | | | | |
| | வேற்றுமைத் தொகை | | | | | | | | | |
| | வினைத்தொகை | | | | | | | | | |
| | பண்புத்தொகைத்/இருபெயரொட்டுப் பண்புத் தொகை | | | | | | | | ✓ | |
| | உவமைத்தொகை | | | | | | | | | |
| | உம்மைத்தொகை | | | | | | | | | |

| இலக்கணம் | கூறு | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| புணரியல் | இயல்புப் புணர்ச்சி | | | ✓ | | | | | | |
| | விகாரப் புணர்ச்சி | | | | | | | | | |
| | தோன்றல் | | | | | | | | | |
| | யகர உடம்படுமெய் | | | | ✓ | | | | | |
| | வகர உடம்படுமெய் | | | | | | ✓ | | | |
| | திரிதல் | | | | | | | | | |
| | கெடுதல் | | | | | | | | | |
| | மை' ஈற்றுப் பண்புப்பெயர் புணர்ச்சி | ✓ | | | | | ✓ | | | |
| | எண்ணுப்பெயர்ப் புணர்சி | | | ✓ | | | ✓ | | | |
| | திசைப்புணர்ச்சி | | | | | | ✓ | | | |
| **வலிமிகுதல்** | | ✓ | | | | | | | | |
| **வலிமிகா இடங்கள்** | | ✓ | | | | | | | | |
| **நிறுத்தக் குறிகள்** | | | | | | | | | | |
| **யாப்பிலக்கணம்** | சந்தம் | | | | | | | | | |
| | மோனை | | | | | | | | | |
| | எதுகை | | | | | | | | | |
| | அசை | | | | | | | | | |
| | | | | | | | | | | |
| | | | | | | | | | | |

வெ.விஜயன், மெந்தகாப் இடைநிலைப்பள்ளி

**பயிற்சி 1**

1. அ) கீழ்க்காணும் **குற்றியலுகர** வகைக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

i) வன்தொடர்க் குற்றியலுகரம் ________________

ii) உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் ________________

(2 புள்ளி)

ஆ) **சேர்த்தெழுது**

அ) வினா + தொகுப்பு = ____________________
ஆ) அங்கு + போகாதே = ____________________
இ) அறம் + வினை = ____________________

(3 புள்ளி)

2. அ) கீழ்க்காணும் செய்வினை வாக்கியத்தைச் **செயப்பாட்டுவினை** வாக்கியமாக மாற்றி எழுதுக.

**கம்பர் இராமாயணத்தை அரங்கேற்றினார்**.

________________________________________________________________

(2 புள்ளி)

ஆ) **குன்றாவினை** வாக்கியம் ஒன்றனை எழுதுக.

________________________________________________________________

(3 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

எப்போது பார்த்தாலும் அப்போதுதான் மலர்ந்தது போல் வாடாமல் இருப்பது போல் இருப்பதால்தான் இதற்கு பெயர் வாடாமலலி. இது வரண்ட பகுதியில் கூட வளரக் கூடிய ஒர் செடியாகும். இந்த செடிகள் மிகவும் குறைவாக ஒன்று அல்லது இரண்டு அடி உயரம் வரை மட்டுமே வளரும். வாடாமல்லிப் பூக்கள் சந்தைகளில் அன்றாடம் எளிதாக கிடைக்கக் கூடிய ஒன்றாகும்.

| **பிழை** | **சரி** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 2**

1. அ) **அசை** இருவகைப்படும். அவை யாவை?

______________________________________________

(2 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் சொல் வகைக்கு எடுத்துக்காட்டு எழுதுக.

அ) திரிசொல் ____________________

ஆ) வடசொல் ____________________

இ) திசைச்சொல் ____________________

(3 புள்ளி)

2. அ) கீழ்க்காணும் வாக்கியத்தில் **பயனிலை** எது?

சந்திரன் நீலகிரி மலைக்குச் சென்றான்.

______________________________________________

(2 புள்ளி)

ஆ) வேண்டுகோள் வாக்கியம் ஒன்றனை எழுதுக.

______________________________________________

(3 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

அறிவியல் வளராத காலத்தில் கப்பல் படையை அமைத்து பல நாடுகளை வென்றான் இராஜேந்திர சோழன். கங்கை வரை படையெடுத்து சென்றுப் பல மன்னர்களை வென்றான். ‘கங்கை கொண்ட சோழன்’ என்று புகழ் கொண்டான். தமிழரை பழித்த ஆரிய அரசர்களை வென்று கண்ணகிக்கு சிலை செய்ய இமயத்தில் இருந்து கல்லெடுத்து வந்தான் சேரன் செங்குட்டுவன்.

| பிழை | சரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 3**

1. அ) **காலம்** எத்தனை வகைப்படும்? அவற்றைப் பட்டியலிடுக.

___________________________________________________________

(4 புள்ளி)

ஆ) **சொல்லின் முதலில் வராத** இடையின எழுத்துகளில் ஒன்றனை எழுதுக.

___________________________________________________________

(1 புள்ளி)

2. அ) **2ஆம் வேற்றுமைத் தொகை** ஏற்று வந்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. தமிழழகன் புதிய வீடு வாங்கினான்.
B. மாணவர்கள் சுற்றுலா சென்றனர்.
C. அக்காவின் திருமணத்திற்கு உற்றார் உறவினர் வந்திருந்தனர்.

(2 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் நேர்க்கூற்று வாக்கியத்தை **அயற்கூற்று வாக்கியமாக** மாற்றி எழுதுக.

மன்னன், “அமைச்சரே, இக்கள்வனைப் பாதாளச் சிறையில் அடையுங்கள்,’’ என்றார்.

___________________________________________________________

(3 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டு விற்கப்படும் பொருள்களையே உள்நாட்டுப் பொருள்கள் என்கிறோம். உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருள்கள் இரக்குமதி செய்யப்படும் வெளிநாட்டுப் பொருள்களுக்கு இணையான தரத்தை கொண்டிருக்கின்றன என்றால் மிகையாகா. உள்நாட்டிலேயே உள்ள மூலப் பொருள்களை கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களின் விலையும் மளிவுதான். உள்நாட்டு தயாரிப்புகளை வாங்குவதன்வழி வணிகம் பெருகுவதோடு நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சி காணும்.

| **பிழை** | **சரி** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 4**

1. அ) கீழ்க்காணும் சொல்லின் **போலி** வகையை எழுதுக.

ஞாயிறு ____________________

(2 புள்ளி)

ஆ) **பிரித்தெழுது**

அ) தென்புலம் = ________________________

ஆ) எவ்வெட்டு = ________________________

இ) கடாரங்கொண்டான் = ________________________

(3 புள்ளி)

2. அ) கீழ்க்காணும் உடன்பாட்டுவினை வாக்கியத்தை **எதிர்மறைவினை** வாக்கியமாக மாற்றி எழுதுக.

**முடிதிருத்தும் நிலையங்கள் நாளை முதல் செயல்படும்.**

______________________________________________________________________________

(3 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் வாக்கியத்தில் **எழுவாய்** எது?

**அமுதன் அழகிய ஓவியம் வரைந்தான்.**

______________________________________________________________________________

(2 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

மிகப் பளமையான கலைகள் யாவும் காட்சிப்படங்களையோ காட்சிப்பொருள்களையோ சார்ந்த காட்சிக் கலைகளாக உள்ளன. எனவே தான் அதன் வரலாறு மிகவும் வியக்கத்தக்க ஒன்றாக உள்ளது. கட்டிடக்கலையும் காட்சிக்கலைகளுள் ஒன்றாக கொள்ளப்படுகிறது. ஆனாலும், காட்சி விளம்பரமும், அலங்கார வணப்பும் கலைகளின் ஈர்ப்பு மையங்களாகும். இசை, அறங்கு, திரைப்படம், நடனம், நாடகம், உள்ளிட்ட ஏணைய அரங்கேற்றல் கலைகள், இலக்கியம், ஊடகங்கள், போன்றவையும் கலையின் அகன்ற வரையறையுள் அடங்கும்.

| **பிழை** | **சரி** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 5**

1. அ) **அடை** இருவகைப்படும். அவை யாவை?

______________________

______________________

(2 புள்ளி)

ஆ) **சேர்த்தெழுது**

அ) கணை + தொடுத்தான் = ______________________

ஆ) பார்த்த + படம் = ______________________

இ) எழுதி + கொடு = ______________________

(3 புள்ளி)

2. அ) **வினைத்தொகை.** இரண்டு எடுத்துக்காட்டு எழுதுக.

______________________ ______________________

(2 புள்ளி)

ஆ) **தொகாநிலைத்தொடரைத்** தெரிவு செய்க.

A. புதைகுழி மூடப்பட்டது.
B. செம்பருத்திப்பூ அழகானது.
C. சிலப்பதிகாரத்தை இயற்றினார்.

(3 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

தமிழகத்தின் தொன்மையான வரலாறு குறித்து பேசக்கூடிய, எழுத கூடிய நபர்கள் அனைவருமே லெமூரியா என்ற வார்த்தையை வாழ்வில் ஒருமுறையாவது கடந்து இருப்பார்கள். சிலப்பதிகாரத்தை பற்றி வகுப்பெடுத்த தமிழ் ஆசிரியர்கள் பலர், மாணவர்களுக்கு லெமூரியா என்ற பிம்பத்தை ஒருமுறையாவது உருவாக்கியவர்களாக இருக்கிறார்கள். தமிழர்கள் அறிந்தவரையில் லெமூரியா என்பது தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்து, பின்னர் கடல் கோலினால் மறைந்து போன ஒரு நிலப்பரப்பு. இதற்கான ஆதாரங்கள் நமது இலக்கியங்களில் ‘குமரிக் கண்டம்’ என்ற அழிந்த தமிழகப் பகுதியை பற்றிக் கிடைக்கும் குறிப்புகள். குமரிக் கண்டமே லெமூரியா கண்டம் என்பதே லெமூரியா பற்றி இன்று உள்ள பொதுவான புரிதல்.

| பிழை | சரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 6**

1. அ) **பிரித்தெழுது**

அ) தமிழுணர்வு = ____________________

ஆ) ஆடலரசி = ____________________

இ) வேற்படை = ____________________ (3 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் சொற்களின் **தொகை** வகையினை எழுதுக.

அ) வீடு கட்டினான் = ____________________

ஆ) மூன்றரை = ____________________

(2 புள்ளி)

2. அ) **குன்றாவினை** வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. குமுதினி பூச்செடிக்கு நீர் பாய்ச்சினாள்.
B. நேற்று இரவு கனத்த மழை பெய்தது.
C. நாளை நான் வெளிநாடு செல்வேன்.

(2 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் செய்வினை வாக்கியத்தை **செயப்பாட்டுவினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

**மாணவர்கள் பள்ளியைச் சுற்றிலும் மரம் நட்டனர்.**

________________________________________________________________

(3 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

உடற்பயிற்சி என்பது, உடலை வறுத்தி தினம் 2 மணி நேரம் ஓட்டமும் நடையும், உடற்பயிற்சிக் கூடத்தில் எடை தூக்குவதும்தான் என்ற என்னத்தை முதலில் கைவிடுங்கள். சிறியதாக உடற்பயிற்சிகள் தினமும் 30 நிமிடங்கள், வாரத்தில் 5 நாள்கள் செய்துப் பாருங்கள். நீங்களே வியக்கும் வண்ணம் பல நல்ல மாறுதல்களை உடலிலும் உள்ளத்திலும் உணரத் தொடங்குவீர்கள். உடல்நலக் குறைவு உங்களிடம் வரப் பயந்து, விழகி ஓட தொடங்கும். மிகவும் முக்கியமாக இதய நோய்கள் உட்பட அதிபயங்கர நோய்கள் உங்களை நெருங்க அஞ்சும்.

| பிழை | சரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 7**

1. அ) கீழ்க்காணும் வாக்கியத்தில் கோடிடப்பட்ட சொல் எவ்வகை **ஆகுபெயர்?**

   பிரித்தி துளசி மாலை கட்டினாள்.

   ______________________________________________

   (3 புள்ளி)

   ஆ) கீழ்க்காணும் சொற்களின் **தொகை வகையினை** எழுதுக.

   அ) வளர்தொழில்
   ஆ) பிறைநுதல்

   (2 புள்ளி)

2. அ) கீழ்க்காணும் பிறவினை சொற்றொடரைப் **தன்வினையாக** மாற்று.

   பாடம் கற்பித்தார் = ____________________________

   (3 புள்ளி)

   ஆ) **செயப்படுபொருளை** ஏற்ற வந்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

   A. அபிசேகன் தமிழ்ப்பள்ளியில் பயில்கிறான்.
   B. கலையரசன் தாமதமாக பள்ளிக்குச் சென்றான்.
   C. மலர்மதி முகத்திற்கு ஒப்பனை செய்தாள்.

   (2 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

   மாலனிடம் சந்திரனைப் பற்றி மனம் கலந்துப் பேச முடியாதது ஒரு குறையாகவே இருந்து வந்தது. இமாவதியின் நிணைவு வந்தது. அவளோடாவது அவனை பற்றிப் பேசி அந்த குறையைப் போக்கி ஆறுதல் பெற எண்ணினேன். திருமணத்திற்கு பிறகு அவளைக் காணவும் இல்லை. இப்போது கண்டு பேச விரும்பினேன். அதைப் பற்றி மாலனிடம் சொன்னால் அவன் தடுப்பான் என்பதும் தெரியும். ஆகவே, அவனிடம் சொல்லாமல் ஒருநாள் இராயப்பேட்டைக்குச் சென்றேன்.

| **பிழை** | **சரி** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 8**

1. அ) **சுட்டெழுத்து** எத்தனை வகைப்படும். அவற்றைப் பட்டியலிடுக.

________________________________________

(3 புள்ளி)

ஆ) **கடைப்போலி**. ஓர் எடுத்துக்காட்டு எழுதுக.

________________________________________

(2 புள்ளி)

2. அ) **மூன்றாம் வேற்றுமை உருபு** ஏற்று வந்துள்ள வாக்கியத்தைத் தெரிவு செய்க.

A. மன்னனின் கற்றோன் சிறப்புடையன்.
B. கோவலனுடன் கண்ணகியும் சென்றாள்.
C. இளஞ்செழியா! இங்கே வா.

(2 புள்ளி)

ஆ) **உணர்ச்சி வாக்கியம்** ஒன்றனை எழுதுக.

________________________________________

(3 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணையை மீறியதற்காக இளைஞர் ஒருவருக்கு ஐயாயிரம் ரிங்கிட் தன்டம் விதிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையின் தொடர்பில் பொதுச்சேவை ஊழியரை வேளை செய்ய விடாமல் தடுத்ததாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இம்மாதம் 18ஆம் தேதியிலிருந்து மலேசியாவில் நடமாட்டக் கட்டுப்பாட்டு ஆணை விதிக்கப்பட்டுள்ளது. அது 14 நட்களுக்கு நடப்பில் இருக்கும் என்றுக் கூறப்பட்டதுடன் அந்த ஆணை பின்பற்றப்படுவதை உருதிப்படுத்தும் நோக்கில் காவல் துறையினருடன் நாடு முழுவதும் 7,500 ராணுவத்தினரும் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

| பிழை | சரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**<u>பயிற்சி 9</u>**

1. அ) கீழ்க்காணும் சொற்குவியலில் **தொழிற்பெயரைத்** தேர்ந்தெடுத்து எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முனைவர் | தாதி | ஆசான் | ஏற்றுமதி | நடிப்பு | வானூர்தி |

________________________________________________

(2 புள்ளி)

ஆ) கீழ்க்காணும் வாக்கியத்தில் கோடிடப்பட்ட சொல் எவ்வகை **ஆகுபெயர்?**

இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட அண்டை நாட்டுக்கு **<u>மலேசியா</u>** உதவிப் பொருள்கள் அனுப்பி வைத்தது.

________________________________________________

(2 புள்ளி)

2. அ) கீழ்க்காணும் எதிர்மறைவினை வாக்கியத்தை **உடன்பாட்டுவினை** வாக்கியமாக மாற்றி எழுதுக.

**இவ்வாண்டு மலேசிய தினக் கொண்டாட்டம் விமரிசையாக நடைபெறா.**

________________________________________________

(3 புள்ளி)

ஆ) வாக்கியத்தை **அமைப்பு அடிப்படையில்** மூன்றாகப் பிரிக்கலாம். அவற்றைப் பட்டியலிடுக.

________________________________________________

(3 புள்ளி)

3. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

அகல் விளக்கு நாவல் சந்திரன், வேலய்யன் என்ற இரு நண்பர்களின் வாழ்க்கையை காட்டுகிறது. சந்திரன் ஒர் பெண்ணைக் காதலிக்கிறான். ஆனால், அவள் அவனை விட்டு பிரிந்துச் சென்று விடுகிறாள். ஆதலால், சந்திரனின் வாழ்க்கை கவலைக்கிடமாக மாறுகிறது. வேலய்யனுக்கு ஒரு நல்வாழ்க்கை கிடைக்கிறது. பின், அவன் சந்திரனைத் திறுத்த முயல்கிறான். இறுதியில், சந்திரன் இறந்து விடுகிறான். இக்கதை இளைஞர்களுக்கு ஒரு பாடமாகவும் அமைகிறது.

| பிழை | சரி |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

**பயிற்சி 10**

1. அ) **சொல்** என்றால் என்ன?

___________________________________________

(2 புள்ளி)

ஆ) **சேர்த்தெழுது**

i) தீ + பந்தம் = ______________
ii) தெற்கு + நாடு = ______________
iii) மகளிர் + கல்லூரி = ______________

(3 புள்ளி)

2. அ) கீழ்க்காணும் தன்வினை வாக்கியத்தைப் **பிறவினை வாக்கியமாக** மாற்றி எழுதுக.

i) தமயந்தி மலர்மாலை அணிந்தாள்.

___________________________________________

(3 புள்ளி)

ii) கீழ்க்காணும் வாக்கியத்தில் விடுபட்ட இடத்தில் பொருத்தமான **வினையடை** சொல்லைக் கொண்டு பூர்த்தி செய்க.

ஹார்ஷினி ஆசிரியர் கொடுத்த வீட்டுப்பாடங்களை ____________ செய்து முடித்தாள்.

___________________________________________

(2 புள்ளி)

2. கீழ்க்காணும் பகுதியில் காணப்படும் **ஐந்து பிழைகளைக்** கண்டறிந்து அவற்றைச் **சரிப்படுத்தி** எழுதுக. (நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்).

கலையும் இலக்கியமும் இரண்டறக் கலந்து அரசியலின் ஆணிவேராக இருந்த, இருக்கின்ற தமிழகச் சூழலில் திரைப்படம் என்பது ஓர் பொழுதுபோக்கு ஊடகம் மட்டும் அல்ல. தமிழகத்தில் திரைப்படம் அரசியலைத் தீர்மாணிக்கிறது; பண்பாட்டை வடிவமைக்கிறது; பொருளாதாரத்தை பிரதிபலிக்கிறது; தனிநபரின் மனநிலையை கட்டமைக்கிறது; ஆகவேதான், "திரையரங்கிற்குள் வாழும் தமிழர்கள், திரைக்குள் வாழும் தமிழர்கள், வாழிடத்தை திரையாகவும் திரையரங்காகவும் மாற்றிக் கொண்ட தமிழர்கள், திரையாகவே மாறிவிட்ட தமிழர்கள்" எனக் குறிப்பிடப்படுகின்றனர். திரைப்படம் தமிழ் நிலத்தின் ஆன்மாவாகவே மாறிவிட்டது என்றுகூடச் சொல்லலாம்.

| **பிழை** | **சரி** |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |

(10 புள்ளி)

# விடைகள்

## பயிற்சி 1

1. அ) i) பட்டு, பாக்கு, சொத்து, பற்று
*(பிற ஏற்புடைய விடைகள்)*
iii) தயிறு, எப்போது, அரிது
*(பிற ஏற்புடைய விடைகள்)*

ஆ) அ) வினாத்தொகுப்பு
ஆ) அங்குப் போகாதே
இ) அறவினை

2. அ) இராமாயணம் கம்பரால் அரங்கேற்றப்பட்டது.
ஆ) யாழினி யாழை மீட்டினாள்.
*(பிற ஏற்புடைய விடைகள்)*

3. i) இதற்கு – இதற்குப்
ii) வரண்ட – வறண்ட
iii) ஒர் - ஒரு
iv) இந்த - இந்தச்
v) எளிதாக – எளிதாகக்

## பயிற்சி 2

1. அ) நேரசை, நிரையசை
ஆ) அ) மஞ்ஞை *(பிற ஏற்புடைய விடைகள்)*
ஆ) அனுபவம் *(பிற ஏற்புடைய விடைகள்)*
இ) சாவி *(பிற ஏற்புடைய விடைகள்)*

2. அ) சென்றான்
ஆ) தயவு செய்து இங்கே அமருங்கள்.

3. i) அமைத்து – அமைத்துப்
ii) படையெடுத்து – படையெடுத்துச்
iii) சென்றுப் – சென்று
iv) தமிழரை – தமிழரைப்
v) வெண்று - வென்று

## பயிற்சி 3

1. அ) மூன்று வகைப்படும்.
இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
ஆ) ழ, ர, ல, ள (ஏதாகினும் ஒன்று)

2. A

3. i) இரக்குமதி – இறக்குமதி
ii) தரத்தை – தரத்தைக்
iii) பொருள்களை – பொருள்களைக்
iv) மளிவுதான் – மலிவுதான்
v) உள்நாட்டு - உள்நாட்டுத்

## பயிற்சி 4

1. அ) முதற்போலி
ஆ) அ) தெற்கு + புலம்
ஆ) எட்டு + எட்டு
இ) கடாரம் + கொண்டான்

2. அ) முடிதிருத்தும் நிலையங்கள் நாளை முதல் செயல்படா.
ஆ) அமுதன்

3. i) பளமையான – பழமையான
ii) ஒன்றாக – ஒன்றாகக்
iii) வணப்பும் – வனப்பும்
iv) அறங்கு – அரங்கு
v) ஏணைய – ஏனைய

## பயிற்சி 5

1. அ) வினையடை, பெயரடை
ஆ) அ) கணை தொடுத்தார்
ஆ) பார்த்த படம்
இ) எழுதிக் கொடு

2. அ) சுடுநீர், தேடுபொறி
*(பிற ஏற்புடைய விடைகள்)*
ஆ) C

3. i) எழுத – எழுதக்
ii) குறித்து – குறித்துப்
iii) சிலப்பதிகாரத்தை - சிலப்பதிகாரத்தைப்
iv) கோலினால் – கோளினால்
v) பகுதியை – பகுதியைப்

## பயிற்சி 6

1. அ) அ) தமிழ் + உணர்வு
ஆ) ஆடல் + அரசி
இ) வேல் + படை
ஆ) அ) வேற்றுமைத் தொகை
ஆ) உம்மைத் தொகை

2. அ) A
ஆ) பள்ளியைச் சுற்றிலும் மாணவர்களால் மரம் நடப்பட்டது.

3. i) வறுத்தி - வருத்தி
ii) என்னத்தை – எண்ணத்தை
iii) செய்துப் – செய்து
iv) விழகி – விலகி
v) ஓட - ஓடத்

**பயிற்சி 7**

1. அ) பொருளாகு பெயர்

   ஆ) அ) வினைத்தொகை
   ஆ) உவமைத்தொகை

2. அ) பாடம் கற்றார்
   ஆ) C

3. i) கலந்துப் – கலந்து
   ii) நிணைவு – நினைவு
   iii) அவனை – அவனைப்
   iv) அந்த – அந்தக்
   vi) திருமணத்திற்கு – திருமணத்திற்குப்

**பயிற்சி 8**

1. அ) இரண்டு வகைப்படும். அகச்சுட்டு, புறச்சுட்டு
   ஆ) பந்தல் – பந்தர் *(பிற ஏற்புடைய விடைகள்)*

2. அ) B
   ஆ) ஆஹா! அந்த வீடு எவ்வளவு அழகாக உள்ளது!
   *(பிற ஏற்புடைய விடைகள்)*

3. i) தன்டம் – தண்டம்
   ii) வேளை – வேலை
   iii) என்றுக் – என்று
   iv) உருதிப்படுத்தும் – உறுதிப்படுத்தும்
   vi) கண்காணிப்பு – கண்காணிப்புப்

**பயிற்சி 9**

1. அ) ஏற்றுமதி, நடிப்பு
   ஆ) இடவாகுபெயர்

2. அ) இவ்வாண்டு மலேசிய தினக் கொண்டாட்டம் விமரிசையாக நடைபெறும்.
   ஆ) தனிவாக்கியம், தொடர் வாக்கியம், கலவை வாக்கியம்

3. i) வாழ்க்கையை – வாழ்க்கையைக்
   ii) ஒர் - ஒரு
   iii) பிரிந்துச் – பிரிந்து
   iv) விட்டு – விட்டுப்
   v) திறுத்த - திருத்த

**பயிற்சி 10**

1. அ) எழுத்து தனித்தோ, தொடர்ந்தோ நின்று பொருள் தருமாயின் சொல் எனப்டும்.
   ஆ) i) தீப்பந்தம்
   ii) தென்னாடு
   iii) மகளிர் கல்லூரி

2. அ) தமயந்தி மலர்மாலை அணிவித்தாள்
   ஆ) விரைவாகச்

3. i) ஓர் – ஒரு
   ii) தீர்மாணிக்கிறது – தீர்மானிக்கிறது
   iii) பொருளாதாரத்தைப – பொருளாதாரத்தைப்
   iv) மனநிலையை – மனநிலையைக்
   v) வாழிடத்தை - வாழிடத்தைத்